வளன் ஆயம்
நொடிதோறும் புதுமைசேர்
தமிழாய்வுத்துறை
தூய வளனார் கல்லூரி [தன்னாட்சி]
திருச்சிராப்பள்ளி- 620002

# “தானியங்களை உதிர்க்கும் சுவர்” கவிதைத் தொகுப்பில் காணலாகும் வாழ்வியல் கூறுகள்

**இ.யோகராஜ்,**
உதவிப்பேராசிரியர், தமிழாய்வுத்துறை,
தூய வளனார் கல்லூரி (தன்னாட்சி), திருச்சிராப்பள்ளி -02.
yogaraj_ta2@mail.sjctni.edu

**முன்னுரை**

மனித வாழ்வைப் பிரதிபலிக்கும் கண்ணாடி இலக்கியம். தமிழ் இலக்கியங்களை வாழ்வியல் இலக்கியங்கள் என்று குறிப்பிடுவது மிகையல்ல. ஒரு தாய் கருவுற்றதில் தொடங்கி மனிதனின் இறப்பு வரையான ஒவ்வொரு செயல்பாடுகளும் மனிதனின் வாழ்வியல் கூறுகளாகப் பார்க்கப்படுகின்றன. மனிதனின் எண்ணம், உடல் வளர்ச்சி, உள்ளத்தின் உணர்வு, கற்பனையின் ஆற்றல்,பட்டறிவின் அனுபவம், இளமையின் துடிப்பு, முதுமையின் பக்குவம் என்று அனைத்துமே வாழ்வியல்கூறுகள்தான். நம் முன்னோர்களின் வாழ்க்கைமுறையை இலக்கியத்தின் கண்கொண்டுதான் நம்மால் பார்க்கமுடிகிறது.மனிதனின் வாழ்வியல் எத்தன்மை வாய்ந்தது என்பதை இக்கட்டுரையின் வழி காண்போம்.

**ஆய்வுச் சுருக்கம்**

கவிஞர் அம்சப்ரியா “தானியங்களை உதிர்க்கும் சுவர்” என்னும் கவிதைத் தொகுப்பின் மூலம் விருந்தோம்பல் பண்பு, கல்வியின் முக்கியத்துவம், தனித்திறன், மன உளைச்சல், தனிமையின் வேதனை, குழந்தையின் மழலை, போதை தரும் மயக்கம், பெண்ணின் துயர வாழ்வு ஆகிய மனித வாழ்வியல் கூறுகள் இக்கட்டுரையில் ஆராயப்படுகிறது.

**திறவுச் சொற்கள்**

வாழ்வியல் கூறுகள் – விருந்தோம்பல் – கல்வி – மன உளைச்சல் – போதை - தனித்திறன் – மாசறக் கற்றோன் –மனம் –மூதுரை –அவசர உணவு – கரும்பு – இடைநில்லா பேருந்து – கரும்பு –பரியம் –பிரியம்.

**கல்வியின் அவசியம்**

ஒருவருடைய அறிவையும் ஆற்றலையும் உயர்த்தி சமுதாயத்தில் நன்மதிப்பை பெற்றுத்தரும் செல்வமே கல்வி. மனித வாழ்வில் கல்வி என்னும் விளக்கு ஏற்றாமல் அவரது வாழ்வு ஒளிர முடியாது என்பதை நன்கு உணர்ந்து "கற்கை நன்றே கற்கை நன்றே பிச்சை புகினும் கற்கை நன்றே" என்று இயம்புகிறது நறுந்தொகை. அழியாச் செல்வம் என்றால் கல்விச் செல்வமே. "மன்னனும் மாசறக் கற்றோனும் சீர்தூக்கின் மன்னனின் மாசறக்கற்றோன் சிறப்புடையவன். மன்னனுக்கு தன் தேசமல்லாமல் சிறப்பில்லை கற்றோர்க்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு"[1](மூதுரை ப.142) மன்னனவை விட கற்றோனுக்கே சென்ற இடமெல்லாம் சிறப்பு என்கிறார் ஔவையார். புறநானூற்றிலும் கல்வியின் சிறப்பை "உற்றுளி உதவியும் உறுபொருள் கொடுத்தும் பிற்றைநிலை முனையாது கற்றல் நன்றே"[2] (புறம்.183) கல்வியின் சிறப்பை எடுத்துரைக்கின்றார்.

"அம்மாவின் சோற்றுக்கூடையைத்
தோளில் மாட்டிக் கொள்கிறாள்
அம்மாவைப் போல
சிறு நடையொன்றை
நடந்து காட்டுகிறாள்
தூரத்திலிருந்து கவனித்த அம்மா
ஓடி வந்து முதுகில் அடித்தவள்
ஒரு புத்தகப் பையை எடுத்து வந்து
இதை வைத்து விளையாடு என்கிறாள்
தன் கண்ணீரை மறைத்து"[3] (தானியங்களை உதிர்க்கும் சுவர்,ப.18)

என்ற கவிதையின் வழிகல்வியேவாழ்வைவளப்படுத்தும். கல்வி கற்காமல் உடல் உழைப்பால் படும் வேதனைகளை உணர்ந்த தாய் குழந்தை விளையாட்டிலும் கல்வி சாதனப் பொருட்கள் இடம்பெற்றிருப்பின் குழந்தை கவன சிதைவின்றி படிக்க வழி வகுக்கும் என்ற எண்ணோட்டத்தையும் கல்வியின் அவசியத்தையும் உணர்த்துகிறது.

**தனித்திறன்**

ஒவ்வொருவருக்கும் ஒரு தனித்திறன் உண்டு என்பதை உணர்ந்து அனைவரும் அவரவர் தனித்திறனை அடையாளம் காண வேண்டும். அனைவரையும் ஒரே அளவு கோளால் அளக்கக்கூடாது. பெற்றோர்கள் அனைவரும் தன் பிள்ளை மருத்துவராக வேண்டும் என்று எண்ணுகிறார்கள் ஆனால் பிள்ளையின் கனவு என்ன என்பதை அவர்கள் உணராமல் போய்கிறார்கள். எல்லாருக்கும் எல்லாவற்றிக்கும் தனித்துவம் ஒன்று உண்டு என்பதை கவிஞர் கீழ்வரும் எலுமிச்சை மரத்தின் கவிதை வழி உணர்த்துகிறார்.

“மனம் கசிந்து வணங்கும்
கடவுளுக்கு
வழிபடும் கனியாக்கலாம்
பக்குவப்பட்ட காலத்தில்
பொருத்தமான ஊறுகாயாக்கலாம்
மதிய கொடைக்கு குளிரூட்டும்
ஒரு தம்ளர் சர்பத்தாகலாம்
அவசர உணவு தயாரிப்பில்
ஒத்தாசையாக சுவை கூட்டலாம்
இதையெல்லாம்
தவறாமல் செய்யும்
எலுமிச்ச மரம் நான்
பலாப்பழம் காய்க்கவில்லையென
வெட்டறிவாளோடு வருகிறான் அவன்”[4] (தானியங்களை உதிர்க்கும் சுவர்,ப.45)

**விருந்தோம்பல் பண்பு**

பண்டைக்கால தமிழ் மக்களின் பழக்க வழக்கங்களில் விருந்தோம்பல் பண்பும் ஒன்றாகக் கருதப்படுகின்றது. விருந்தோம்பலின் மூலம் குடும்பத்தல் ஒற்றுமையும் மகிழ்ச்சியும் உண்டாகும். “விருந்தே தானும் புதுவது புனைந்த யாப்பின் மேற்றே”[5] (தொல். பொருள் 1495)தொல்காப்பியர் விருந்து என்ற சொல்லைப் புதியது என்ற பொருளில் குறிப்பிடுகின்றார். முன்பின் அறியாத புதியவர்களை விருந்தினர் என்று குறிப்பிடுகின்றனர்.

“விருந்துகண் டொளிக்குந் திருந்தா வாழ்க்கைப் பொறிப்புன ருடம்பிற் றோன்றியென் அறிவுகெட நின்ற நல் கூர்மையே”[6] (புறம்.266)புலவர் பெருங்குன்றூர்கிழார் இளஞ்சேட் சென்னியிடம் எனக்கு எந்த குறையும் இல்லை என்றாலும் விருந்தினர் வந்தால் அவர்களை உபசரிப்பதற்குத் தேவையான செல்வம் இல்லாத வறுமைநிலை மட்டும் என்னிடம் இருக்கிறது அதை மட்டும் தீர்த்து வைப்பாயாக என்று கூறுவதன் மூலம் விருந்தோம்பல் பண்புபின் முக்கியத்துவம் புலப்படுகின்றது.

“இலையை மடிப்பதற்கு முந்தைய
வினாடிக்கு முன்பாக
மறுக்க மறுக்க
பரிமாறப்பட்ட கூடுதல் இட்லியின்
நீண்டு கொண்டிருக்கிறது
பிரியங்களின் நீள் சரடு”[7] (தானியங்களை உதிர்க்கும் சுவர், ப.09)

என்று கவிஞர் அம்சப்ரியா அன்பின் நீட்சியை விருந்தோம்பலின் மூலம் வெளிக்கொணர்கிறார்.

**செல்வம் நிலையற்றது**

பிறக்கும் போது நாம் எதையும் கொண்டு வந்ததில்லை. இறக்கும் போது நாம் எதையும் எடுத்துச் செல்வதும் இல்லை. இதை நன்கு உணர்ந்த அனைவருக்கும் செல்வத்தின்மோகம் விட்டதாக இல்லை. மண்ணாசைக் கொண்டு பெற்றோர் பிள்ளைகளுக்குள்ளும், சகோதர்களுக்குள்ளும், உறவினர்களுக்குள்ளும் ஒருவருக்கொருவர் சண்டையிட்டு பகைமையை வளர்த்துக் கொண்டு

மாண்டுபோகிறார்கள் என்பது ஊர் அறிந்த உண்மை மறுப்பதற்கு ஒன்றும் இல்லை. மண்ணாசைக் கொண்டு மாண்டுபோனபின் புறம்போக்கு நிலத்தில்தான் அடக்கம் செய்யப்படுகிறார்கள் என்ற இயல்பானநடப்பை நூலாசிரியர்அழுத்தமாக தமது கவிதையின் வழி எடுத்துரைக்கிறார்.

“சர்வே எண் இடப்படாத
நிலத்தில் படர்கிறது துயரக்கொடி
யாருடைய எல்லைக்கு வடபுறமும் தென்புறமும்
என்பதறியாமல்……
……………………………………………
நான் யாருடைய நிலத்திலும் வளராத
கரும்பைச் சுவைக்கத் துவங்கினேன்.”[8] (தானியங்களை உதிர்க்கும் சுவர், ப.10)

**மன உளைச்சல்**

ஒரு மனிதனின் வாழ்க்கையில் நிகழும் தொந்தரவு, குழப்பம், உறவுச்சிக்கல், நிதி நெருக்கடி, அதிர்ச்சிகரமான நிகழ்வு அல்லது வழக்கத்திற்கு மாறான அனுபவங்கள் மனதில் மாற்றத்தை ஏற்படுத்தும். இவை வாழ்க்கை மாற்றத்திற்கு வழிவகுக்கும். எதிர்மறையாகப்பாதிப்பை ஏற்படுத்தலாம். அவர்களைச் சுற்றியுள்ள உறவுகளையும் ஒருவகையில் பாதிப்பை ஏற்படுத்தலாம். வாழ்வில் பால்வேறு பிரச்சனைகளில் ஊடாக ஏற்படும் மனக்குழப்பத்தினால் உறக்கமின்றி தவிப்பதை கவிஞர் தெள்ளத்தெளிவாகச் சுட்டுகின்றார்.

“அந்த ஏழு வயது குழந்தை
நினைவுக்கு வராமல் இருந்திருந்தால்
அப்பாவும் மகனும்
ஞாபகத்திற்கு வராமல் இருந்திருந்தால்
அவர்கள் நடந்து போவது
மறந்து போயிருந்தால்
இப்படிப் பட்டியல்களிட
வாய்ப்பற்ற காலமாக இருந்திருந்தால்
இந்த இரவில்
செழித்த உறக்கமொன்று வாய்த்திருக்கலாம்”[9] (தானியங்களை உதிர்க்கும் ப.13)

**பெண்ணின் துயரம்**

கூடும் உறவே கூட்டுறவு. கூடி வாழ்தலே குடும்பம். குடும்ப வாழ்வில் கணவன் மனைவி என்னும் உறவு மிகவும் புனிதமானதாகக் கருதப்படுகிறது. இல்லற வாழ்வில் கணவன் மனைவி இருவரும் இணைந்து ஆற்ற வேண்டிய அறச் செயல்களும் கடமைகளும் பல. கணவன், மனைவி, குழந்தைகள், தாத்தா, பாட்டி ஆகியோரின் ஒன்றிணைந்த ஓரிட வாழ்வே குடும்பம். இக்குடும்ப வாழ்வில் சிற்சில பிரச்சனைகள் ஏற்படும். கணவன் மனைவிக்கு இடையே ஏற்பட்ட பிரச்சனையின் விளைவாக குழந்தையோடு தன் தாய் வீட்டிற்கு செல்லும் பெண்ணின் மனத்துயரினை கவிஞர் அம்சப்ரியா கவிதையின் ஊடாக அருமையாகப் படம் பிடித்துக்காட்டியிருக்கிறார்.

“இடைநில்லா பேருந்தொன்றில்
பதட்டத்துடன் அமர்ந்திருக்கறாள்
……………………
அப்பாவின் முகம் நிழலாடுகிறது
அம்மாவிற்கென ஒரு சமாதானத்தைத் தயார் செய்கிறாள்
நிறுத்தத்தை அடைகிறாள்
தனக்கான வீதியல்
பதிகிறது பாதம்
மெல்ல எட்டிப்பார்க்கிறது
அவன் கொடுத்தனுப்பிய கண்ணீர்”[10](தானியங்களை உதிர்க்கும் சுவர், ப.33)

**போதை தரும் மயக்கம்**

அனைவருக்குமான கல்வி, தொழிலாளர் நலன், சமுதாயச் சீர்திருத்தம், அனைவருக்குமான சம வாய்ப்புகள் எல்லாம் எளிதில் கிடைத்திட்ட ஒன்றல்ல என்பதை உணர வேண்டும். உன்னுடைய உரிமைகளைப் பரிக்கிறார்கள். உன்னுடை வாசல் கதவுகளை அடைக்கிறார்கள். உன் வேர்களை வெட்டத் துடிக்கிறார்கள். உனக்கு ஆதாரமாக இருக்கின்ற ஊற்றுக்கண்ணை மூடத்தயாராகிறார்கள். யாரோ ஒருவர் போராடி இரத்தம் சிந்தி பெற்றுத்தந்த உரிமைகளின் மேல் நாம் அமர்ந்துக் கொண்டு அவற்றை அனுபவிப்பவர்கள் அதன் வரலாற்றை மறந்து போதை என்னும் மாயை உலகில் உலா வருகின்றனர் என்றுகுமுறுகிறார். மதுவை ஒழிப்போம் மனித வளம் காப்போம் என்று மது மற்றும் போதை பொருட்கள் ஒழிப்பு மகளிர் மாநாட்டை அரசியல்

கட்சி நடத்துவதிலிருந்து மதுவின் விளைவுகளை பாமரரும் உணர்ந்து கொள்ள முடிகிறது. போதை மயக்கத்தில் நிலைகுலைந்து நிற்கும் உனக்கும் சேர்த்து தெருவில் நின்று உன் உரிமைக்கும் யாரோ ஒருவர் குரல் கொடுக்கிறார்கள் என்பதை கீழ்வரும் கவிதையில் குறிப்பிடுகிறார்.

"உன் வரலாற்று வரிகளில்
ஒன்று கூட
உன்னை அசைத்தில்லை
யாருக்கும் கற்றுத் கொடுத்ததுமில்லை
உனக்குப் போதுமானதாக இருக்கிறது
தற்காலிகமான
போதையொன்று"[11] (தானியங்களை உதிர்க்கும் சுவர், ப.22)

**முடிவுரை**

"தானியங்களை உதிர்க்கும் சுவர்" என்னும் கவிதைத் தொகுப்பின் மூலம்கல்வியின் முக்கியத்துவத்தை கல்வி பயிலாது உடல் உழைப்பினால் பல்வேறு துயரங்களுக்கு உள்ளாகும் தாய் தன் குழந்தையின் விளையாட்டில் கூட படிப்புச் சாதனங்கள் இடம்பெற வேண்டும் என்றவேட்கை, தமிழர்கள் உயர்ந்த அன்பின் வெளிப்பாட்டில் ஒன்றாகக் கருதப்படும் விருந்தோம்பல் பண்பு, தனித்திறனை ஊக்குவித்தல், நிலையற்ற வாழ்வில் பொருளின் மேல் மனதை நிலைநிறுத்தாமை, பெண்களின் துயர வாழ்வு மற்றும் போதையின் விளைவு ஆகியவை இக்கட்டுரையில் ஆராயப்பட்டுள்ளது.

**துணை நின்ற நூல்கள்**


1. அம்சப்ரியா, தானியங்களை உதிர்க்கும் சுவர், பூபாளம் பதிப்பகம், தஞ்சாவூர், 613602, முதல் பதிப்பு மே 2024.
2. ஔவையார், மூதுரை, உமா பதிப்பகம், மண்ணடி, சென்னை 600 001, பன்னிரெண்டாம் பதிப்புஜனவரி 2009.
3. திருஞானசம்பந்தம் (உ.ஆ) தொல்காப்பியம், பொருளதிகாரம், கதிர் பதிப்பகம், திருவையாறு, 613204, முதல் பதிப்பு நவம்பர் 2013.
4. புறநானூறு, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், அம்பத்தூர், சென்னை 600 098, மூன்றாம் பதிப்பு பிப்ரவரி 2007.